DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellancous Case No. STC 606/2019

Preliminary Register P.W. 2

Sessions

Prosecution

Deposition of Witness for Defence

Court

Name : Vijayakumar

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2021.

**முதல் விசாரணை** -

நான் தற்போது முளகுமூடு கனரா வங்கியில் அதிகாரியாக பணிபுரிகிறேன். கூடுதல் பொறுப்பாக மேலாளராக இருக்கிறேன். சிண்டிகேட் வங்கி கிளையாக இருந்து தற்போது கனரா வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் எஸ்.எல். தாசன் எங்கள் வங்கி கிளையில் கணக்கு வைத்திருந்தார். கணக்கு எண் 61832200013490. இந்த வழக்கில் என்னிடம் காட்டப்படும் Ext. P.2 ஆவணம் எங்கள் வங்கியால் போதிய பணம் இல்லை என்று காசோலை

திருப்பப்பட்டதற்கான மெமோ என்றால் சரிதான். எங்கள் வங்கியில் இருந்து வாதி 11.01.2016 அன்று விவசாய தொழில் கடனாக ரூ. 100000/- பெற்றிருந்தார் என்றால் அது குறித்து ஆவணம் என்னிடம் இல்லை. அவர் கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. கடனை திரும்ப செலுத்தாமல் இருந்தால் அது வங்கி கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வாதியின் வங்கி கணக்கு விவரங்கள் 01.01.2018 முதல் 06.02.2021 வரை தாக்கல் செய்கிறேன். கணக்கு விவரங்கள் வா.சா.ஆ.8 ஆகும்.

குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை எண் 818644. வங்கியில் இருந்து காசோலை திருப்பப்பட்ட மோமோவில் காசோலை எண் 000967518644 என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கு சிறப்பு காரணம் எதுவும் உண்டா என்றால் கனரா வங்கியில் காசோலையின் 6 நம்பர்கள் குறித்துக்கொள்ளப்பட்டு பாசீலிக்கப்படும். சிண்டிகேட் வங்கியில் காசொலையில் M.I.C.R. Code சேர்த்து 000967518644 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காசோலை C.T.S. Scane காசோலை செய்யப்பட்டு பரிசீலிக்கப்படும் என்றால் சரிதான். C.T.S. Scane தேதியை தவிர மற்ற இடங்களில் திருத்தங்கள் இருந்தால் காசோலை நிராகரிக்கப்படும் என்றால் சரிதான். மேற்படி காசோலையில் Five என்ற வார்த்தை திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக இதுபோன்ற திருத்தங்கள் இருந்தால் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படாது என்றால் சரிதான். வாடிக்கையாளரின் கையெழுத்து இருந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி காசோலையில் வாடிக்கையாளர் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். மேற்படி காசோலையை கவுண்டரில் செலுத்தப்பட்டதா அல்லது Clearance box ல் போடப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. கவுண்டரில் செலுத்தியிருந்தால் திருத்தப்பட்ட காசோலை திருப்பப்பட்டிருக்கும். வாதியின் வங்கி கணக்கு விவரத்தில் 24.08.2018 அன்று ரூ.100000, 29.10.2018 அன்று ரூ.2,00,000, 30.01.2019 அன்று ரூ.1,00,000, 16.04.2019 அன்று ரூ.1,00,000 கணக்கில் இருந்து எடுக்கப்பட்டதாக உள்ளதா என்றால் இல்லை. காசோலையின் வங்கி கணக்கு விவரங்கள் காசோலையில் உள்ள கையெழுத்து சரியாக உள்ளதா என்ற விவரங்கள் சரியாக உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை

வழக்கு காசோலை கணக்கில் போதிய பணம் இல்லை என்ற ஒற்றை காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.